கல்யாண வைபவங்களுக்கு தேவையான பட்டுப் புடைவைகள் மற்றும் சிறுவர்களுக்கான தெரிவுகளுக்கு
கோபிராஜ் ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில் சோபிக்க சோபனா
கோபிராஜ் ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 13 வெள்ளிக்கிழமை (29 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 243

# வடக்கில் பணிபுரிவதற்கு ஐ. நா. டாக்டர்கள் வருவர்

## பற்றாக்குறையைப் போக்க அவசர நடவடிக்கை இது

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடபகுதியில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஐ. நா. தொண்டர் அமைப்பு உதவ உள்ளது.

மக்களுக்குரிய வைத்திய சேவை பாதிக்கப்படாமல் இருக்கும் விதத்தில், ஐ. நாவின் தொண்டர் டாக்டர்கள் இங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

வடபகுதியில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதை அறிந்து ஐ. நா. இதனை ஓர் அவசர நடவடிக்கையாக மேற்கொள்கிறது.

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஐ. நா. தொண்டர் பிரிவின் திட்ட அதிகாரி திரு. ரப்பான் குமார் பார்மன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

வடபகுதியில் டாக்டர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. யாழ். பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேறிய இளம் டாக்டர்கள் கூட, இப்பகுதியில் பணிபுரிய மறுக்கின்றார்கள்.

இந்த நிலைமை குறித்து பல்வேறு வட்டாரங்களும், ஐ. நா. அபிவிருத்தித் திட்டப் (UNDP) பிரிவின் கவனத்துக்குக் கொண்டு வந்தன.

அதன் விளைவாக இவ்விடயத்தில் உதவுவதற்கு ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் உப பிரிவான தொண்டர் பிரிவு முன் வந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வந்த சர்வதேச பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஜெனிவா தலைமையகத்தில் இலங்கை விவகாரங்களுக்கு பொறுப்பாக பணி

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரசாங்க அதிபர் ஹமில்டனை சந்தித்தார்

கொழும்பு, ஜூலை 29

யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவைச் சந்தித்துப் பேசினார்.

பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவையும் சந்தித்துப் பேசிய அரச அதிபர் யாழ். மாவட்ட நிலைவரம் பற்றி இருவருக்கும் விவரமாகத் தெரிவித்தார் என்று தஐலண்ட் செய்தி வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## திறந்த வாகனங்களில் பிரசாரம் செய்ய முடியாது

கொழும்பு, ஜூலை 29

வேட்பாளர்கள் திறந்த வாகனங்களில் இருந்த வண்ணம் பிரசாரம் செய்வதையும் — ஆதரவு தேடுவதையும் பொலிஸ் மா அதிபர் தடை செய்திருக்கிறார்.

தேர்தல் சட்டத்தின் கீழ் இவ்வாறு பிரசாரம் செய்வது தடை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்படி பிரசாரம் செய்வது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

## 4 படை முகாம்கள் அகற்றப்படும்

அம்பாறை மாவட்டத்தில் நான்கு ஸ்ரீலங்கா படை முகாம்கள் அகற்றப்படவிருக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் எல்லையோர முகாம்கள் அடிக்கடி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாவதாலேயே அவை அகற்றப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

12 ஆம் கிராமத்தில் உள்ள சகின் முகாம், 12 ஆம் கிராம ஆலையடிச் சந்தி முகாம், 4 ஆம் கிராம பாதுகாப்பு முகாம் சவளைக்கடை பாதுகாப்பு முகாம் ஆகிய முகாம்களே அப்புறப்படுத்தப்படவிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## தீக்குச்சி விளையாட்டால் வகுப்பறை எரிந்து நாசம்

தென்மராட்சி, ஜூலை 29

வீதியில் சென்ற இரு சிறுவர்கள் "றாச் பாண்ட்"டில் வைத்து எறிந்த தீக்குச்சியினால் இத்தாவில் வேம்போடுகேணி சி. சி. த. க. பாடசாலை ஆரம்ப பிரிவின் இரு வகுப்பறைகள் எரிந்தன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தீ சுவாலையாக எரிந்ததைக் கண்ட பொதுமக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தீயைக் கட்டுப்படுத்தினர்.

இதனால் இதற்கு அருகில் தொடராக இருந்த இயக்கச்சி அ. த. க. பாடசாலை வகுப்பறைகளில் தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

பாடசாலையில் இருந்த தளபாடங்கள் மீட்கப்பட்ட போதிலும் மாணவர்களின் மேசைகள் எரிந்து சேதமடைந்தன. (இ-117)

## ஜி. சீ. ஈ. உயர்தர - புலமைப் பரிசில்: வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் முதலாவது பத்து நாட்களுக்கான வினாத்தாள்களும் —

எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவிருக்கும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்களும் — நேற்று வந்து சேர்ந்துள்ளன.

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளும் எடுத்து வரப்பட்டுள்ளன. (இ-3)

## மருத்துவபீட மாணவர் எதிர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

தவிசார் மருத்துவக் கல்லூரியான வட இலங்கை மருத்துவக் கல்லூரியில் மாணவர்களாக இருந்த 43 பேரையும் யாழ். மருத்துவ பீடத்தில் அனுமதிப்பதென பல்கலைக்கழகம் முதலை எடுத்த முடிவை கண்டிக்கும் வகையில் மருத்துவபீட மாணவர்கள் நேற்றுக் காலை எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுக்காலை 8 மணிக்கு விரிவுரைகளை பகிஷ்கரித்த மருத்துவபீட மாணவர்கள் சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணம் பல்கலைக்கழக பிரதான அலுவலகத்துக்கு முன்பாக அமர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பகல் 12 மணிக்கு முதலவரின் முடிவைக் கண்டிக்கும் மகஜர் ஒன்றை துணைவேந்தரிடம் அவர்கள் கையளித்தனர்.

அதன் பின் தமது வகுப்புகளுக்கு திரும்பினர். (இ-3)

## ஐ.தொ.கா. இம்முறை ஐ.தே.க. பக்கம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கப்போவதாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்திருக்கிறது.

காலஞ்சென்ற தொழிற்சங்கத் தலைவர் ஜனாப் அப்துல் அஸீஸினால் ஆரம்பிக்கப்பட்ட ஐ. தொ. கா. தனது 40 ஆண்டு கால வரலாற்றில் பெரும்பாலான காலம் தேர்தலில் சுதந்திரக் கட்சியையே ஆதரித்து வந்தது. (இ-எ)

## தீவுப்பகுதி வாக்களிப்பை அவதானிக்க தனியான குழு

### 3 கட்சிகள் கூடித் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 29

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் பொதுத் தேர்தல் சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்த கண்காணிப்புக் குழு ஒன்றை அப்பகுதிகளுக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுப்பது என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஈ. பி ஆர். எல் எவ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் கூட்டாகத் தீர்மானித்துள்ளன.

பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கைக்கு வரும் சர்வதேச அவதானிகள் குழுவில் ஒருபகுதியினரை யாழ். மாவட்டத்துக்கு அனுப்பமுடியாத சூழ்நிலை ஏற்படுமிடத்து —

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு ஒன்றையாவது அங்கு அனுப்பி வைக்குமாறு தேர்தல் ஆணையாளரை கோருவது என்றும் இந்த மூன்று கட்சிகளும் தீர்மானித்துள்ளன என்று கொழும்பு தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## சிறிசேன கூரே நாடுதிரும்புவார்

### பிரதமர் ரணில் கூறுகிறார்

வெளிநாடு சென்ற அமைச்சர் சிறிசேன கூரே, இன்னும் சில தினங்களில் நாடு திரும்பி ஆளும் கட்சிக்காக தேர்தல் பிரசாரம் செய்வார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் கூரே தமது குடும்பத்தினருடன் வெளிநாடு சென்றுள்ளது குறித்து கருத்து வெளியிட்ட சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறிசேனநாயக்கா, கவிழும் கப்பலில் இருந்து தப்பிச்செல்வது புத்திசாலித்தனமான செயல் என்று தெரிவித்தார்.

தர்மசிறிசேனநாயக்காவின் இக்கூற்று பொதுமக்களைக் கோபமூட்டியிருப்பதாக பிரதமர் ரணில் தெரிவித்திருக்கிறார். (இ-எ-6)

## வடக்கு-கிழக்குக்கு உலக வங்கிவழங்கிய 50 கோடி ரூபா திரும்பப் பெறப்பட்டது

கொழும்பு, ஜூலை 29

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடனில் பயன்படுத்தப்படாதிருந்த 2 கோடி 50 லட்சம் டொலர் பணத்தை (சுமார் 125 கோடி ரூபாவை) உலக வங்கி திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டதாக, அதிகாரபூர்வ நிதி வட்டாரங்களை மேற்கோள் காட்டி "தஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

பத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியே இவ்வாறு திருப்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை உறுதி செய்த திறைசேரி வட்டாரங்கள் —

நாட்டில் காணப்படும் அமைதியின்மை மற்றும் பிரச்சினைகள் காரணமாக ஒதுக்கப்பட்ட பணத்தை பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக தெரிவித்தன.

திரும்பப் பெற்றுக் கொண்ட பணத்தில் ஒரு கோடி டொலர் (சுமார் 50 கோடி ரூபா) வடக்கு - கிழக்குப் பகுதியில் அவசர கால புனரமைப்புத் திட்டங்களை நிறைவேற்ற ஒதுக்கப்பட்டிருந்தது.

கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் ஆகிய துறைகளின் அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்ட பணமும் உலக வங்கியால் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இப்பணத்தின் ஒரு பகுதி 1985 முதல் செலவழிக்கப்படாது இருந்து வந்தது.

கடந்த ஆண்டும் செலவழிக்கப்படாத 70 லட்சம் டொலர் பணத்தை உலக வங்கி திரும்பப்பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## முச்சந்தி முரளி



இந்த மண்ணில படிச்சவை எல்லாம் அக்கரைக்குப் போக, அக்கரையிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி இருக்கு பாருங்கோ.........!

## சஜித்தின் ஆதரவாளர்கள் பொ. ஐ. மு.வில் இணைவு

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸவின் புதல்வர் சஜித்தின் நூற்றுக் கணக்கான ஆதரவாளர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் சு. க. எம்பி மஹிந்த ராஜபக்ஷ இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த 17ஆம் திகதி சஜித்தின் ஆதரவாளர்களுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களுக்கும் இடையே முதலாவது பேச்சுவார்த்தை இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாமல் ராஜபக்ஷவின் வாசஸ்தலத்தில் முதல் சந்திப்பு இடம் பெற்றதாகக் கூறிய அவர், இம்மாவட்டத்தில் 5 ஆசனங்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கைப்பற்றும் என்றும் தெரிவித்தார். (உ-எ)

## ஐ. தே. க. அதிர்ச்சி

கொழும்பு, ஜூலை 29

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகன் சஜித்தின் ஆதரவாளர்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக பிரசாரஞ் செய்ய முன்வந்துள்ளமை, ஐ. தே. க. தலைமைப் பீடத்தில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸா குடும்பத்தின் விசுவாசிகள் பலர் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிக்க முன்வரும் சாத்தியக் கூறுகள் தென்படுவதாக பகுப்பாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தென் மாகாணத்தில் சஜித்தின் ஆதரவாளர்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் [illegible] பது ஆரம்பம் வட்டாரங்களில் [illegible] ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈ. பி. டி. பியைக் கண்டித்து ஈ. பி. ஆர். எல். எவ் சுவரொட்டி

### தீவுப்பகுதியில் மூடிக்கல் நிலை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 29

யாழ். மாவட்டம் — தீவுப் பகுதிகளில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள ஈ.பி. ஆர் எல். எவ் கட்சியினர் பாதுகாப்புப் படையினர் மற்றும் ஈ. பி. டி. பியினரை கண்டிக்கும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஈ. பி. டி. பி அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனலைதீவில் ஈ. பி. ஆர். எல். எவ் கட்சியினர் இப்படியான சுவரொட்டிகளை ஒட்டியபோது ஊர் மக்கள் சிலர் அதனை ஆட்சேபித்தனர். மக்களின் கோரிக்கையை அவர்கள் புறக்கணித்தனர். இதனால் ஆத்திரமடைந்த ஊர் மக்கள் ஈ. பி. ஆர். எல். எவ் ஆதரவாளர்களை சுற்றிவளைத்தனர். எனினும் ஈ.பி. ஆர்.எல்.எவ் ஆதரவாளர்கள் தப்பியோடி அருகில் உள்ள கடற்படை முகாமில் தஞ்சமடைந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆதரவாளர்களின் நடத்தைக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக கடந்த சனிக்கிழமை அனலைதீவில் கடையடைப்பு நடத்தப்பட்டது.

மக்களை அச்சுறுத்தி வாக்குக் கோரும் ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பை ஈ. பி. டி. பி வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## தீவகத்தில் பல இடங்களில் சமகாலத்தில் தாக்குதல்கள்

### புலிகள் நடத்தக்கூடும் என படையினர் ஊகம்

கொழும்பு, ஜூலை 29

தேர்தல் சமயத்தில் தீவுப் பகுதிகள் மீது கடல்வழித் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தக் கூடும் என்று யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ அதிகாரிகள் ஊகம் தெரிவித்துள்ளனர்.

"த ஐலண்ட்" நாளிதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

சாத்தியப்படின் சமகாலத் தாக்குதல்களை தீவுப்பகுதிகளின் மீது விடுதலைப்புலிகள் நடத்தலாம் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காரைநகரில் விடுதலைப் புலிகள் அண்மையில் கடல்வழித் தாக்குதல்களை மேற்கொண்ட போது பல கடற்படையினர் கொல்லப்பட்டனர் என்பதையும் "த ஐலண்ட்" சுட்டிக்காட்டியுள்ளது.

வட பகுதியில் உள்ள துருப்புகள் அதி தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் யாழ். இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழரின் வீட்டுக்கு வெளியே தெஹிவளையில் குண்டு வெடிப்பு

### 12 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 29

கடந்த திங்கட்கிழமை தெஹிவளையில் தமிழர் ஒருவரின் வாசஸ்தலத்துக்கு வெளியே குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த 12 தமிழ் இளைஞர்களை இரகசியப் பொலிஸார் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெஹிவளை எபநேசர் பிளேஸில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்கு வெளியே இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. எவரும் காயமடையவில்லை. கைதான இளைஞர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற படை அதிகாரிகளும் தேர்தலை கண்காணிப்பார்கள்

கொழும்பு, ஜூலை 29

ஓய்வுபெற்ற பொலிஸ் மற்றும் பாதுகாப்பு சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் பொதுத் தேர்தலை கண்காணிக்க இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஓய்வுபெற்ற விமானப் படைத் தளபதி ஹரிகுணதிலக இத்தகவலைத் தெரிவித்தார்.

இக்குழுவில் ஓய்வுபெற்ற 30 சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கைச் சரித்திரத்தில் முப்படைகளைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உயர் அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவிருப்பது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டம் தீவுப் பகுதிகளில் நடைபெறும் தேர்தலைக் கண்காணிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படவில்லை என்று ஹரிகுணதிலக தெரிவித்தார்.

தமது கண்காணிப்புப் பணிக்கு படையினர் மற்றும் பொலிஸாரினதும் உதவிகளை பெறமுடியும் என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையில் — தேர்தல் திணைக்களம் சர்வதேச கண்காணிப்பாளர்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஓய்வுபெற்ற படை அதிகாரிகள், பொலிஸார் எதிர்வரும் மூன்று வார காலத்தில் அமைதியை நிலைநாட்டும்பணியில் முக்கிய பங்கு வகிப்பர் என்று அரசியல் பகுப்பாய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-எ)

## விமானப் படை அதிகாரி கட்சி மோதலில் கொலை

### வவுனியாவில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 29

கடந்த 17ஆம்திகதி அன்று வவுனியாவில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கு இடையேஏற்பட்ட மோதலில் ஏ. என். சமரன் என்ற விமானப்படை அதிகாரி சத்திரன் குத்திக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு நபர்கள் இரண்டு வெவ்வேறு கத்திகளைப் பாவித்து விமானப்படை அதிகாரியைத் தாக்கினர் என்று மரணவிசாரணையில் தெரிய வந்தது.

இதேவேளை— இக் கொலைச் சம்பவத்தில் முக்கிய சந்தேக நபராக கருதப்படும் ஆளும் கட்சிப் பிரமுகர் ஒருவரை காப்பாற்றும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதாக, மரணவிசாரணை நடத்திய வவுனியா பதில் நீதிவான் திரு. என். எம். எக்ஸ் சொரிணபால ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் முறையிட்டிருக்கிறார். (உ-எ)

## விபத்தில் செல்லச்சாமி காயமின்றித் தப்பினார்!

கொழும்பு, ஜூலை 29

கடந்த ஞாயிறன்று மாலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களான எம் எஸ். செல்லச்சாமியும், நிமால் ஸ்ரீபால டி சில்வாவும் காயமின்றி உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் பயணம் செய்த வாகனத்தின் மீது— பேஸ்லைன் வீதியில் உள்ள ரயில்வே கடவைக்கு அருகில் வைத்து — தனியார் பஸ் ஒன்று மோதியது. ஆயினும் அவர்கள் இருவரும் காயமின்றி மயிரிழையில் உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து விபத்தில் சம்பந்தப்பட்ட தனியார் பஸ் வண்டியை சிலர் தாக்கிச் சேதப்படுத்தியதாகவும் பஸ் சாரதியும் தாக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு சீருடை

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்க வேண்டிய சீருடைத் துணிகள் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக ஆஸ்பத்திரி தாதிகளுக்கு சீருடைத் துணி வழங்கப்படுகிறது. (ஐ-17)

## வாக்குச்சீட்டுகள் அச்சிடும் இடத்தில் 75 பொலிஸார்

கொழும்பு, ஜூலை 29

அரசாங்க அச்சகத்தில் வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் ஆறு அச்சு இயந்திரங்களை 75 பொலிஸார் பாதுகாத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தேர்தலைக் குழப்பும் அச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வுப் பகுதியினரின் அறிக்கைகள் தெரிவித்ததை அடுத்தே இந்த உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டுவருவதாகவும் சண்டே டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது (இ-எ)

## பாதுகாப்பு ஆலோசகராக சிறில் ஹேரத்

கொழும்பு, ஜூலை 29

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பாதுகாப்பு ஆலோசகராக முன்னாள் பொலிஸ்மா அதிபர் சிறில் ஹேரத் பணி புரிந்து வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

இவரின் தலைமையில் பாதுகாப்புக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் அவ்வப்போது ஏற்படும் நிலைவரம் குறித்த தேவையான ஆலோசனையை பெறுமாறு பொ.ம. ஐ மு. வேட்பாளர்களை முன்னணியின் தலைமைப் பீடம் பணித்துள்ளது. (இ-எ)

### தேர்தல் பிரசாரத்தின் போது

## நீண்ட வாகன அணிகளில் ஊர்வலம் செல்லத் தடை

### பொலிஸ்மா அதிபர் உத்தரவு

கொழும்பு, ஜூலை 29

தற்போது நடந்து வரும் பொதுத் தேர்தல் பிரசாரங்களின் போது அரசியல் கட்சிகள் நீண்ட வாகன அணிகளை நடத்துவதை பொலிஸ்மா அதிபர் பிராங்டி சில்வா தடை செய்துள்ளார்.

எந்த வாகன அணியிலும் இரண்டு வாகனங்களுக்கு மேல் பயன்படுத்தக் கூடாது என்று பொலிஸ்மா அதிபர் சகல வேட்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பல வாகனங்கள் கொண்ட வாகன அணியை பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதால் பாதுகாப்பை நிலைநாட்டுவது கஷ்டமான காரியம் என்றும் — வன்செயல்களுக்கும் இதுவே காரணமாக உள்ளது என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார். (ஐ-எ)


## மண்ணெண்ணெய் விநியோகம்

யா/தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் 29-7-94 தொடக்கம் 01-8-94 வரை காலை 9.30 முதல் பிற்பகல் 1.00 மணிவரை தலா 8 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும்.

(7557)

தலைவர்
மாணவர் அவை



## யாழ் மத்திய கல்லூரி லியோ கழகம்

## பரிசு சீட்டு முடிவுகள்

முதலாவது பரிசு இல. 1038
இரண்டாம் பரிசு இல. 1665
மூன்றாம் பரிசு இல. 2006

ஆறுதல் பரிசுகள்:

| | | | |
|---|---|---|---|
| (1) | இல. 1014 | (2) | இல. 532 |
| (3) | இல 2523 | (4) | இல. 2621 |
| (5) | இல: 758 | (6) | இல. 2512 |
| (7) | இல 253 | (8) | இல. 265 |
| (9) | இல. 783 | (10) | இல. 2376 |

பரிசு வழங்கும் திகதி: 29-07-1994 காலை 10 மணி

(சி-8650)

தலைவர்,
லியோ கழகம்
யாழ். மத்திய கல்லூரி


### மனித உரிமைகளை மீறிய

## 40 பொலிஸ் அதிகாரிகள் மீதான விசாரணைகள் நிறுத்தப்பட்டன

கொழும்பு, ஜூலை 29

மனித உரிமைமீறல் தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள 40 உயர் பொலிஸ் அதிகாரிகள் மீதான விசாரணைகள் நிறுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை — சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள வேறு 60 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மீதான ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகார துஷ்பிரயோகம், சட்டவிரோதமாக மரங்களை வெட்டியமை, தனிப்பட்ட தகராறுகளில் தலையிட்டமை சட்டவிரோதமான முறையில் உத்தியோக கடமைகளைச் செய்தமை ஆகிய குற்றச் சாட்டுகள் தொடர்பாக இவ் விசாரணை நடத்தப்படுகிறது. இந்த அதிகாரிகளில் பொலிஸ் அதிபர்கள், உதவிப் பொலிஸ் அதிபர்கள் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் அடங்குவர்.

சில சிரேஷ்ட பொலிஸ் அதிபர்கள், உதவிப் பொலிஸ் அதிபர்கள் மீதான விசாரணைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு, பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் பணிபுரியும் படி அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ எ)

## பெரியோர்களை வாழும் போதே கௌரவித்துப் பாராட்ட வேண்டும்

### நல்லை ஆதீன முதல்வர் உரை

யாழ்ப்பாணம் ஜூலை 29

"சமய சமூக பணிகளிலும் கல்வி, கலை இலக்கியப் பணிகளிலும் அர்ப்பணிப்புடன் ஈடுபடும் பெரியோர்களை அவர்கள் வாழும் போதே நாம் கௌரவிக்க வேண்டும்."

வட்டுக்கோட்டை கலைநகர் பொதுமக்கள் ஓய்வு பெற்ற அதிபர் திரு. வே. தம்பையாவின் சேவைகளைப் பாராட்டிய விழாவில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் இவ்வாறு கூறினார்.

விழா வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோயில் மேலை வீதி "இராஜ வைத்தியர்" அ. க. குமாரசுவாமி அரங்கில் சட்டத்தரணி த. பூ. கதிர்காமநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் மேலும் சொன்னதாவது:

"அதிபர் திரு வே. தம்பையா சமய சமூகப் பணிகளிலும் மொழி வளர்ச்சிப் பணிகளிலும் ஈடுபட்டு இத் துறைகளில் பலரை உருவாக்கியுள்ளார். சைவசமயத்துக்கும் தமிழுக்கும் பெரிதும் பாராட்டத்தக்க சேவைகளை இவர் புரிந்துள்ளார்.

"திரு. தம்பையாவுக்கு வட்டுக்கோட்டை லயன் கழக ஆளுநர் டாக்டர் பரேதன் பொன்னாடை போர்த்தியும், வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கத் தலைவர் பண்டிதர் அ ஆறுமுகம் "சமூக மணி" விருது வழங்கியும், சிற்ப சிகாமணி திரு. சீ. செந்தூர்ராசா பொற்கிழி வழங்கியும் கௌரவித்தார்கள்.

மணிவிழா மலரை சண்டிலிப்பாய் செயலக செயலர் திரு. து' வைத்தியலிங்கம் வெளியிட்டு வைத்தார்.

யாழ். செயலக சேவை அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், பேராசிரியர் அ சண்முகதாஸ், சங்கானை செயலக செயலர் திரு. கா சந்திரராசா ஆகியோர் உட்படப் பலர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள்.

முன்னதாக விழா நாயகனாகிய திரு வே. தம்பையாவையும் அவருடைய மனைவியையும் பொதுமக்கள் விழா மேடை வரை மங்கள வாத்தியங்களுடன் அழைத்து வந்தனர்.

விழா இறுதியில் திரு எஸ் திலகநாயகம் போலின் இன்னிசைக் கச்சேரியும் நடன நிகழ்ச்சி நாடகம், சாந்தன் குழுவினரின் இன்னிசை ஆகியனவும் இடம்பெற்றன. (க-161)


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## முக்கிய அறிவித்தல்

கல்வி நிறுவனம்
பொறுப்பேற்றுக் கொண்டமை

எமது ஒன்றிய விதிகளை மீறியமைக்காக தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு விதித்த குற்றத் தொகையை பல சந்தர்ப்பங்கள் வழங்கியும் செலுத்தத் தவறிய—

தென்மராட்சிக் கல்விக்கோட்டத்தில்

### விஞ்ஞானக் கல்வி நிலையம்

எமது ஒன்றிய மேற்பார்வையில் தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டுள்ளதையும்

அதன் இயக்குநர்
திரு. மா, சிவசுப்பிரமணியம்
(மணியம் மாஸ்டர்)

எந்த தனியார் கல்வி நிறுவனத்திலும் கற்பிப்பதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளதையும் மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக

தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு

நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதையும் அனைவர்க்கும் அறியத் தருகின்றோம்

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

[சி-8797]



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## உறுப்பினர் கவனத்திற்கு

சந்தா பண நிலுவை உள்ளவர்களுக்கு ஜூலை மாதம் வரை சலுகையுடன் இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இதுவரை செலுத்தி முடிக்காதவர் மீது ஆகஸ்ட் 3 ஆம் திகதி முதல் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

செலுத்தாதவர்களின் நிறுவனம் பூட்டப்பட்டு சந்தா முழு நிலுவையும் ஒரே தடவையில் கட்டி பற்றுச் சீட்டு பெற்ற பின்னரே தொடர்ந்தும் இயங்க அனுமதி வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்கு முன் தங்கள் நிலுவைகளை செலுத்தி சிரமங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சகல கோட்டங்களின் பொருளாளர்களுக்கான மிக முக்கியமான வேண்டுகோள்.

தங்கள் கோட்ட எல்லைக்குட்பட்ட நிறுவனங்களின் சந்தா நிலுவை விவரங்களை உடனடியாக எமது செயலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்

பொதுச் செயலாளர்,
யாழ் மாவட்டம்.

[சி-8798]


## இளைஞர் சமூகப் பணிபுரிந்து மக்கள் சேவைபுரிய வேண்டும்

### சமூக சேவை பாராட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஜூலை 29

"இளைஞர்கள் சமூகப்பணிகளில் ஈடுபட வேண்டும். அவர்கள் மக்களோடு மக்களாக இணைந்து மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும்".

திரு காசி விஸ்வநாதனின் சமூகப் பணிகளைக் கௌரவிக்குமுகமாக நடைபெற்ற அறுபதாவது அகவை விழாவில் பேசிய நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. இ இளங்கோ இவ்வாறு கூறினார்.

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தின் சார்பில் நிலையத் தலைவர் திரு. சொ. மன்மதராஜலிங்கம் தலைமையில் விழா கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது.

திரு இளங்கோ மேலும் பேசும்போது கூறியதாவது:

"..ாதாரண ..... சரித்துவரும் ..... அல்லல்படும் ..... அவர்களுக்கு ஆறுதல் வழங்க சில சமயங்களில் நிர்வாக இயந்திரங்கள்கூட செயற்பட முடியாத நிலைமை ஏற்படுவது உண்டு. இத்தகைய வேளைகளில் சமூக சேவையாளர்கள் தான் மக்களுக்கு உதவமுடியும்"

யாழ் பல்கலைக்கழக விவசாயபீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி மோகனதாஸ் பேசும்போது கூறியதாவது:

கல்விக் கூடங்கள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் சிறப்பின் ஊடாகக் கிராமத்தின் வளர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியும். இவற்றின் ஊடாக இந்தப் பகுதியின் வளர்ச்சியை உணர்ந்து கொள்ளும் நாம் இந்த வளர்ச்சிக்குக் காரண..... ..... மணிவிழா..... ..... வேளைகளில் ..... பாராட்டுகிறோம்.

இதன் மூலம் இளம் தலைமுறையினருக்குச் சமூகத் தொண்டின் மீது பற்று ஏற்படும். கிராமத்தின் மீது திரு காசி விஸ்வநாதன் கொண்ட பற்று இளைய தலைமுறைக்கு பசையம் வழிகாட்டியாக அமையும்"

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு க. ஜெயரட்ணம், பிரம்மஸ்ரீ வாமதேவக் குருக்கள், பிரசித்த கல்விப் பணிப்பாளர் திரு துரை தியாகராஜா, வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரம், பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. சி வேலாயுதம், முன்னாள் அதிபர் திரு. மு. இராமலிங்கம், யாழ் ப நோ. கூ. ச. தலைவர் திரு. சொலமன் சிறில், சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் உட்படப் பலர் திரு. காசி விஸ்வநாதனின் சேவைகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். (க-111)


## இளங் கலைஞர் மன்ற மாதாந்த இசை நிகழ்ச்சி

ஆதரவு: வசந்தாஸ் இல. 15, யாழ். பஸ் நிலையம் முன்பாக

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்ட நாதர் வீதி. நல்லூர்,

காலம்: 30-07-1994 சனி மாலை 5 மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை 5-00—5-30 பாட்டு:

செல்விகள்: ச. கோகிலா, ப: மதிவதனி, ந. சகிலா. வே, தாரணி, கு. கலைச்செல்வி, ப. மலர்விழி, கு. ஷாமினி, நா: காயத்திரி, ம. ஸ்ரீஜனனி நா. விஜிதா

செல்வி ரி. சந்தானலெட்சுமி — வயலின்
செல்வன் எம். சஜன் — மிருதங்கம்

5-30—6-20 வீணையிசை

திருமதி சங்கரி இராஜேந்திரன் — வீணை
திரு. கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

6-20—7-20 பாட்டு:

திருமதி யசோதா ஸ்ரீகுமரன் — பாட்டு
திரு ஆர் எஸ். கேசவமூர்த்தி — வயலின்
திரு எஸ் துரைராசா — மிருதங்கம்

7-20—7-45 மங்களவிளக்கேற்றல்:

திரு. இராசா வாமதேவன் அவர்கள் [இராசா டீசல் எஞ்சினியேஸ்]
திரு சி. மகாதேவா அவர்கள் [வர்த்தகர் வசந்தாஸ், யாழ்ப்பாணம்]

தலைமையுரை:
வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்

பிரதம விருந்தினர் உரை,
கதாமிர்தவாரிதி திரு. செ. சத்தியமூர்த்தி அவர்கள்

சிறப்பு விருந்தினர் உரை,
என். கி. முருகேசு அவர்கள், பிரபல வர்த்தகர்

7-45—8-45
செல்வி மைதிலி அம்பலவாணரின் மாணவிகள் அளிக்கும்
பரதநாட்டியம்

8-45—9-45 இசை நாடகம்:
கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் சி. தனபாலசிங்கம் அவர்களின்
மரணத்தை வென்றவர்கள்
(பாரம்பரிய இசைவடிவ நாடகம்)

கலா ரசிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

— மேற்படி மன்றத்தினர்.

[சி-8799]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வாக்கு எண்ணும்வரை வெற்றி நிச்சயம் இல்லை

## ஐ.தே.க. பிரமுகர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 29

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கடைசி வாக்கு எண்ணப்படும் வரை எந்தக்கட்சி வெற்றியீட்டும் என்று எவரும் கூறமுடியாது.

மேல்மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் கொழும்பு மாவட்ட ஐ. தே. க. வேட்பாளருமான சுசில் முனசிங்க முன்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிதான் பலமான நிலையில் இருப்பதாகத் தெரிந்தாலும் இறுதியில் ஐ. தே. க. வெற்றியீட்டும் என்பதில் சந்தேகமேயில்லை — என்றும் அவர் கூறினார்.

கேள்வி: "தொங்கு" நாடாளுமன்றம் தெரிவானால் ஐ. தே. க. எந்தவித அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும்?

சுசில்: எக்கட்சிக்கும் பெரும்பான்மையில்லாத தொங்கு நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டால், சிறுபான்மையினர் அல்லது வடபகுதியில் தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள்தான் அரசாங்கத்தை அமைப்பது எந்தக்கட்சி என்பதை தீர்மானிக்கப்போகின்றன. இறுதியில் அதுதான் நடக்கும் ... அதன் அர்த்தம் என்ன? எனது எண்ணப்படி, வடபகுதிப் பிரச்சினையை நாம் கவனிக்க வேண்டும். சரியா? இப்போது காட்டும் கவனத்திலும் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். சிறுபான்மையினர் இன்றி ஐ. தே. கட்சியோ சுதந்திரக் கட்சியோ ஒன்றும் செய்ய முடியாது.

சிலரின் கனவுகளை ஒரு பக்கம் வையுங்கள். யதார்த்த நிலை இதுதான். வடபகுதிப் பிரச்சினையை நாம் தீர்த்தே யாக வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(இ-எ)


## மயான பாதுகாப்பாளர் தேவை
## கொக்குவில் இந்து மயானம்

கொக்குவில் இந்து மயானத்திற்கு பாதுகாப்பாளர் தேவை. தகுதியுடையவர்கள் நற்சான்றுகளுடன், **31-07-1994** ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கும் 10-00 மணிக்குமிடையில் மயான மண்டபத்திற்கு நேரில் சமூகமளிக்கவும்.

★ சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

பொ. யோகலிங்கம், தலைவர்.
சி. மாதவகுமாரன், செயலாளர்.

(7556)



## புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் (வ-து)

புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்க அங்கத்தவர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்களுக்கான

## கலந்துரையாடல்

**30 - 07 - 1994இல்**

தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினரால் 30-07-94 சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ்/ புனித சார்ள்ஸ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடத்தப்பட இருக்கின்ற மேற்படி கலந்துரையாடலில் சங்கத்தின் சகல அங்கத்தவர்கள், கிளைக் குழுக்களின் உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் - செயலாளர்,
புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்,
201/1, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(கி-8649)



தமிழீழத் தேசியத் தலைவர்
**திரு. வே. பிரபாகரன்**
அவர்களிடமிருந்து
**மாமனிதர்** விருது பெற்ற **கலைஞானி**
அவர்கள் நடத்தும்

## மாபெரும் தொல்பொருள் கண்காட்சி

இடம்: யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
காலம்: 1994 — 07 — 28, 29, 30ஆம் திகதிகள்
நேரம்: காலை 8-30 முதல் மாலை 5-30வரை

கலைஞானியின் சுயமுயற்சியினால் சேகரிக்கப்பட்ட புராதன கலை, பண்பாட்டுச் சின்னங்கள் மருத்துவம், புகைப்படம், மதம், இனம் தொடர்பான விபரங்கள் தமிழீழத்தின் இன்னும் பல பொருள்கள்.

"எமது தேசியத்தின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், கட்டுக்கோப்பிற்கும் முதுகெலும்பாகவுள்ள எமது மொழி, கலை, கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும்."

தேசியத் தலைவர்,
திரு. வே. பிரபாகரன்.

நுழைவுச் சீட்டு: பெரியோர் **10/-**
சிறுவர் **5/-**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. N. புகன்சிறீந்திரன் B. A. (Hons)
(கண்காட்சி குழுச் செயலாளர்).

விளம்பர அன்பளிப்பு:

## இராசம் அரிசி ஆலை,
யாழ். வீதி, சாவகச்சேரி.

[32115]


# சந்திரிகா, தினேஷ், காமினிக்கு கொமாண்டோக்கள் பாதுகாப்பு

கொழும்பு, ஜூலை 29

சுதந்திரக் கட்சிப் பிரதித் தலைவி சந்திரிகா, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா, அமைச்சர் காமினி திஸநாயக்கா ஆகியோருக்கு இராணுவக் கொமாண்டோக்கள் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரத்தில் இருந்து மூன்று தலைவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை இராணுவக் கொமாண்டோக்கள் ஏற்றிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

90 ஆயிரம் பேர் கொண்ட இராணுவத்தில் இராணுவக் கொமாண்டோக்கள்தான் உயர் நவீன பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி விஜேதுங்காவுக்கும் இராணுவக் கொமாண்டோக்களே பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

சந்திரிகா, தினேஷ், காமினி ஆகியோருக்கு முன்பு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு போதாது என்பதால்தான் இராணுவக் கொமாண்டோக்களிடம் அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சந்திரிகாவுக்கு எதிராக சுவரொட்டிகள்

கொழும்பு, ஜூலை 29

சந்திரிகா குமாரணதுங்காவை அவதூறு செய்யும் சுவரொட்டிகள் ஆங்கிலேயிலாலில் அச்சிடப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்ட முன்னாள் சு. க. எம். பி. மங்கள சமரவீர முன்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திரிகாவுக்குப் பெருகிவரும் ஆதரவை தடுத்து நிறுத்த அவர் பற்றி அவதூறான தகவல்களைப் பரப்புவதில் ஆளும் கட்சியினர் ஈடுபட்டிருப்பதாகவும் சமரவீர குற்றஞ்சாட்டினார்.

(உ-எ)

## மற்றொருவர் மரணம்

கொழும்பு, ஜூலை 29

தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த தினத்தன்று நடைபெற்ற வன்செயல்களில் காயமடைந்தவர்களில் இன்னொருவர் நேற்று முன்தினம் கொழும்புப் பெரியாஸ்பத்திரியில் காலமானார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளரான எஸ் பி ஜயசிங்கா என்பவரே சத்திரசிகிச்சையின் போது மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ-6)

## கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி நாளை ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியின் யாழ்ப்பாணம் கல்வி வலயம் -2க்குரிய ஆசிரியர்களுக்கான ஆரம்ப வைபவமும், அமர்வுகளும் நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும். மேற்படி பயிற்சி நெறியில் பயில்வதற்காக தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்ட ஆசிரியர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு யா/கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரிக்குத் தவறாது சமுகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் கல்வி வலயம் -2 அறிவிக்கின்றார்.

இப் பயிற்சிநெறியின் இறுதி வருட யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான சிறப்புக் கற்பித்தல் முறை மொடியூல்ஸ் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வழங்கப்படுமென நெறியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. தி. கமலநாதன் தெரிவிக்கின்றார்.

மீட்டல் வகுப்புகள், பயிற்சிப் பரீட்சை பற்றி கலந்துரையாடவிருப்பதால் சகல இறுதிவருட மாணவர்களும் மேற்குறிப்பிட்ட திகதியில் வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர்.

(எ)

## வினைத்திறமை காண் தடை பரீட்சை

கொழும்பு, ஜூலை 29

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையின் கணக்குப் பதிவாளர் சேவையின் வகுப்பு II பிரிவு 'அ' உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 12 - 08 - -94க்கு முன் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

இது பற்றிய விவரங்கள் [illegible] 15 [illegible] மானி [illegible]

(எ)

# ஐக்கிய இலங்கையில் கடைசித்தேர்தல் இது!

## ம. ஐ. மு. பிரமுகர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 29

எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் ஐக்கிய இலங்கையில் நடக்கும் கடைசித் தேர்தலாக இருக்கப் போகிறது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் டாக்டர் நளின் டி சில்வா முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகள் இன்று எமக்கு சொந்தமாக இல்லை. வடக்கு-கிழக்குக்கு எம்மால் செல்ல முடியாதுள்ளது. மலையகத்தில் தொண்டமானின் செல்வாக்கு மேலோங்கியுள்ளது. 1815ஆம் ஆண்டில் சிங்களவர் நாடு என்று உரிமை கொண்டாடப்பட்ட மலைநாட்டுப் பகுதி இன்று தொண்டமானின் கையில் உள்ளது. ஐ. தே. க. அரசின் சாதனை இதுவே — என்றும் அவர் கூறினார்.

(உ-எ)

## கிரனேட் வெடித்த சம்பவத்தில்

# உயிரிழந்த இருவரும் பொலீஸ் கான்ஸ்டபிள்கள்

அம்பாறை மாவட்டம் — பொத்துவிலில் கிரனேட் ஒன்று தற்செயலாக வெடித்ததில் உயிரிழந்த இருவரும் ரிஸர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் கண்டெடுத்த கிரனேட் குண்டை இரு கான்ஸ்டபிள்களும் பரிசோதனை செய்து கொண்டிருந்தபோது அது திடீரென்று வெடித்ததாகவும் அதில் இரு கான்ஸ்டபிள்களும் கொல்லப்பட்டனர் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் — பொத்துவிலில் பொதுத்தேர்தலில் போட்டியிடும் ஆளும்கட்சி அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் கான்ஸ்டபிள் ஒருவருக்குரிய கிரனேட் ஒன்றின் ஊசியை அங்கிருந்த சிறுவன் ஒருவன் தற்செயலாக அகற்றியபோது அது வெடித்ததாகவும் — அப்போது இருவர் உயிரிழந்ததாகவும் வேறு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-எ)

# மேடை இடிந்த சம்பவம் 100பேர்வரை விசாரணை!

கொலன்னேவயில் ஐ. தே. க. தேர்தல் மேடை சரிந்து விழுந்த சம்பவம் தொடர்பாக இதுவரை குறைந்தது நூறு பேர் வரை இரகசியப் பொலீஸாரினால் விசாரிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அச்சம்பவம் பற்றிய ஒவ்வொரு அம்சமும் விசாரிக்கப்படுகின்றது. திறந்த மனதுடன் விசாரணை நடத்தப்படுவதாக சிரேஷ்ட பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்மேடையை அமைப்பதற்கு உதவி புரிந்த பொறியியலாளர் ஒருவரும் விசாரிக்கப்பட்டவர்களில் அடங்குகின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

# ஐக்கிய தேசிய கட்சியினரால் யாழ். செல்ல முடியுமா?

## பொ. ஐ. முன்னணி சவால்

கொழும்பு, ஜூலை 29

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தால் நாடு பிளவுபடும் என்று கூறும் ஐக்கிய தேசியக் கட்சியினரால் இன்று யாழ்ப்பாணம்சென்று தேர்தல் பிரசாரம் செய்ய முடியுமா? இது எதனைக் காட்டுகிறது. நாடு ஏற்கனவே பிளவுபட்டுள்ளதை இது காட்டவில்லையா?

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல கண்டியில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் இக்கேள்வியை எழுப்பினார்.

1980 இல் இருந்து நாட்டில் இடம்பெற்ற தேர்தல் ஒவ்வொன்றிலு "ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள், இனப்பிரச்சினையைத் தீர்ப்போம்" என்றுதான் ஐ.தே.க. தலைவர்கள் கூறி வந்தனர். அதே கோரிக்கையைத் தான் இப்போதும் அக்கட்சி மீண்டும் முன்வைத்துள்ளது என்றும் அவர் கூறினார். (இ-எ)

# வானியல் உடுத்தொகுதி ஆய்வு இரவுப் பாசறை

வலிகாமம் தெற்கு, ஜூலை 29

விஞ்ஞானக் கல்வியை முழுவதும் செயல்முறை சார்ந்ததாக மாற்றியமைக்கும் திட்டத்தின் முதல் நடவடிக்கையாக, அச்சுவேலி மகாவித்தியாலய விஞ்ஞான கழகத்தினர் வானியல் உடுத்தொகுதி ஆய்வு இரவுப்பாசறையினை அண்மையில் நடத்தினர்.

கல்விக்கான ஆய்வு நெறியின் முதற்கட்டமான இந்நிகழ்வை அச்சுவேலி மகாவித்தியாலய அதிபர் திரு. க. இராசதுரை ஆரம்பித்து வைத்தார்.

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் ஆலயவெளியில் விஞ்ஞானக் கழகத்தின் ஆசிரியர் திருமதி கு. பரமகுரு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் விஞ்ஞான ஆசிரியர்கள், ஆண்டு எட்டு மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கள ஆய்வுக் கற்றல் நெறி ஒன்பதாம், பத்தாம் ஆண்டு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(எ—158)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### ஆண்டு - 3, 4, 5,

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் 31-7-94, 2-8-94 திகதிகளில் வெளியிடப்படும். ஆண்டு 3, ஆண்டு 4, வினாத்தாள் 30-7-94 வெளியிடப்படும். பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(32129)

### மணமகள் தேவை

பேராதனைப் பல்கலைக்கழக உள்வாரி பொருளியல் சிறப்பு மாணவனும் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரும், வயது 33, நற்குணமுள்ள, இரகபாவம் குறைந்த, செவ்வாய்க் குற்றமில்லாத சிறியருக்கு அழகும், சைவப் பண்பும் உள்ள 30 வயதிற்குட்பட்ட ஆசிரிய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். பொ.: ஐயம்பிள்ளை, இளைடி ஒழுங்கை, கோப்பாய் வடக்கு, கோப்பாய். (32081)

### தவறிவிட்டது

28-7-94 அன்று சிவலிங்கப் புளியடிக்கும், கொக்குவிலுக்கும் இடையில் இரண்டு அடையாள அட்டைகளும், கடிதங்கள் கூடிய ஒரு சாட்போட் உறை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்: நா. முத்துவினாயகம், கன்னாமலை வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாய். (7585)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும்.
[7445]

### பொருளியல்

A/L பரீட்சைக்கு உதவக் கூடிய வினா - விடைகளைக் கொண்டது. ஆக்கம்: வே. கருணாகரன். கிடைக்கும் புத்தகசாலைகள்: பரமன் சாவகச்சேரி, மொடேர்ன் நெல்லியடி, தர்க்கா சுன்னாகம், நாகபாலன் மானிப்பாய், பிரபல புத்தகசாலைகள் யாழ்நகர். சொற்பபிரதிகளே உண்டு: (32109)

## அத்துமீறி புகுந்த ஆயுள்வேத மாணவர்கள்

கொழும்பு, ஜூலை 29

கம்பஹ தேசிய ஆயுள்வேதப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த திங்கள் காலை நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றுக்குள் பலாத்காரமாகப் புகுந்து வசிக்கத் தொடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அட்சு வதிவிட வசதிகள் செய்து தராத காரணத்தினால் தாங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-எ-6)

## விசர்நாய் தடுப்பூசி மருந்து

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடபிராந்திய சுகாதார திணைக்களத்துக்கு ஒரு தொகுதி விசர்நாய் தடுப்பூசி மருந்து வந்து சேர்ந்துள்ளது.

கடந்த வாரம் "டோம்மயான்" கப்பல் மூலம் இவை இங்கு எடுத்து வரப்பட்டன.
(ஐ-4)

## திருப்பணிச் சபை

சுழிபுரம், ஜூலை 29

சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயத்திற்கு புதிய தேர் செய்வதற்கு தேர் திருப்பணிச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நூறு வருடம் பாவனையில் இருந்த பழைய தேரை ஒத்த புதிய தேர் செய்யப்படவுள்ளது. பழைய தேரின் இல்லுகள், அச்சு போன்ற முக்கிய பொருட்கள் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படவுள்ளன. (க-28)

---

## ஞானவேள்வி

வட்டுக்கோட்டை மூளாய் வீதி
உடுக்கியவளைப் பிள்ளையார் கோயிலில்
வெள்ளிக்கிழமை தோறும் ஞானவேள்வி
நடைபெறுகிறது.
நேரம்: பிற்பகல் 3-00 மணி தொடக்கம்

வேள்வித் திரவியம்:

**பகவத்கீதை**

நிகழ்த்துபவர்:
சைவமணி இரட்ணராசா
(இளைப்பாறிய பொறியியலாளர் - சுழிபுரம்)

அருள் இன்பம் துய்க்க
விழையும் ஆன்ம நேயர்களை
அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய பஜனை மன்றம்,
வட்டுக்கோட்டை

விளம்பர அன்பளிப்பு:
**லீலா ஸ்ரோஸ்**
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
[32126]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 04 — 02 — 1938 | 09 — 08 — 1993 |

### அமரர் சுப்பிரமணியம் நடராஜா

திதி: **29-7-1994**

அப்பா என்ற எமது அன்பு விளக்கு அணைந்ததப்பா! அப்பா எமைவிட்டுச் சென்றனையோ! எம் குடும்பத்தைப் பாதுகாத்துச் சோறூட்டி வளர்த்து எமை ஆளாக்கி விட்டுச் சென்றனையோ! மறைந்து ஒருவருடம் ஆகிவிட்ட இவ்வேளை பிரபாகரன், சுதாகரன் இருபிள்ளைகளையும் நும் மாறாத அன்புதனை நினைவுறும் நும் மனைவியிடம் விட்டுச் சென்றனையோ! மாறாத பச்சிளம் முகங்கள் பிள்ளைகள் இருவரும் ஆறாது அப்பா என்றிடும் மழலை மொழி கேளாது சென்றனையோ! உம் உறவினர் பலர் அருகிருக்க அமைதியாய் உறங்குகின்றீர்!

உங்கள் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவாக துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (32110)

---

## முதலாம் வருட நினைவு நாள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 — 03 — 1932 | 30 — 07 — 1993 |

திருமதி
### மேரி யோசேப்பின் இராசமலர் பீலிக்ஸ்

ஈன்ற தம் மக்களை பாசத்துடனும்
அன்புடனும் பாதுகாத்து ஒப்பற்ற அன்னையாக
வள்ளுவன் கண்ட குடும்பப் பெண்ணிற்கு
ஈடு இணையற்ற உதாரண புருஷியாக
உடன் பிறப்புகளுக்கு தம் வாழ்வை
அர்ப்பணித்த தியாகச்சுடரே
அம்மா எம் நாட்டு நிலையால்-உனை
விட்டு தொலைவில் உயிர் பிரிந்திட்ட நிலையில்
உடல் பார்க்காது தவியாய்த் தவித்திட்டோம்
உறவை விட்டு ஓராண்டில்-உம்
ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்:
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மிருசுவில் நீக்கிலார் ஆலயத்தில் நாளை 30-07-94 காலை 6.15 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தாய்.

"இக்னேசியஸ் வாசா"
பழைய வாய்க்கால்,
மிருசுவில். [illegible]

---

## யாழ்: ஸ்ரீதரில்

இன்று மட்டும்!
பிற்பகல் 3 - 00 மணிக்கு மட்டும்

**உயிராயுதம்**

**JURASSIC PARK**

இவ்விரு படங்களுடனும்

**போர் முரசு**

படமும் காண்பிக்கப்படும்
[சி-8793]

---

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி மேனகா கெங்காதரன்

(ஆண்டு '4D' யா/இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை)

மாணவியின் மரணம் குறித்து அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சபையினர்,
பழைய மாணவ சங்கத்தினர்.

(32132)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 12 — 07 — 1930 | 02 — 08 — 1991 |

### அமரர் செல்லையா சிவரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: 29 - 07 - 1994

அன்பின் சிகரமான எங்கள் ஆசை அருமை அப்பா! கண்ணின் மணிபோல் எங்களைக் காத்து, அன்பிற்கும், பாசத்திற்கும் ஈடில்லாமல் எங்களை வளர்த்து இந்நிலையை எங்களுக்கு தந்த அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்தி எம்மை விட்டுப் பிரிந்த போதிலும், எங்கள் நெஞ்சத்தில் உங்கள் நினைவு உயிருள்ளவரை நீங்காது.

குடும்பத்தினர், உறவினர்கள்;

நிலவுகலட்டி,
இடைக்காடு. (32114)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 29 — 10 — 1958 | 09 — 08 — 1989 |

அமரர்
### டாக்டர் (செல்வி) கலா சிங்கநாயகம்

(BSMS யாழ். பல்கலைக்கழகம் - கைதடி)

திதி: 29 — 07 — 1994

ஆண்டு ஐந்துசென்றாலும் அழியாது உன் நினைவுகள்
அருயிரே உனை இழந்து ஆறிடுமோ எம் துயரம்
அன்பே உனை மறந்து அலைகடலில் துரும்பாக
ஆடுகிறோம் உந்தன் நினைவில்
அணையாத தீபம் என ஒளிர்வாய் என இருந்தோம்
அரும்பிலே கிள்ளிய எம் பெருமான் செயலை -
என்னென்போம்
மீண்டும் வரும் பிறவியிலும் உறவாட உன்னுடன்
வேண்டுகிறோம் ஆண்டவனை என் அருமைச் -
செல்வமே!

இனி நாம் எப்பிறப்பிற் காண்போமோ?

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரங்கள்.

வயாவிளான். (சி-8792)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## குழந்தை பிறக்கு முன்பே...

பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பது தெரியாமலே, அக் குழந்தைக்கு என்ன பெயர் வைக்க வேண்டும் என்று தம்பதியர் சிலர் தமக்குள் வாக்குவாதப்படுவது உண்டு. சுகப்பிரசவமாகி குழந்தை ஆரோக்கியமாகப் பிறக்கும் என்பது நிச்சயமாகு முன்னரே, அதற்குச் செய்யவேண்டிய வசதிகள் குறித்துத் திட்டமிடும் பெற்றோரும் உளர்.

அவர்களைப் போலவே, தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் பல நாள்கள் இருக்கும் போதே, குழப்பம் எதுவுமின்றி அது நடந்தேறும் என்பது நிச்சயமாகு முன்னரே, தேர்தல் முடிவுகள் எதுவும் தெரியாமலே, தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பது குறித்துத் தெற்கில் பேசப்படுகிறது.

பொதுத் தேர்தல் முடிந்ததும், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் சாத்தியம் குறித்து இப்போதே பேச்சுகள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன!

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்பதைக் கருத்தில் வைத்தே தேசிய அரசு அமைக்கும் எண்ணம் உதித்துள்ளது என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டினாலும் கூட, நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமற் செய்வதற்காக அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு ஆசனப் பலம் கிடைக்காது என்றே கொள்ளப்படுகின்றது.

விகிதாசாரத் தேர்தல் முறை அதற்கு இடம் கொடுக்கப் போவதில்லை; ஆகையால் ஸ்ரீலங்காவின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் சேர்ந்தால் மட்டுமே நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க முடியும். அதற்காகவே தேசிய அரசு ஒன்று தேவைப்படுவதாகச் சிங்கள அரசியல்வாதிகள் கருதுகிறார்கள்.

நாட்டின் மிக முக்கியமான, அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாக விளங்குவது இனப்பிரச்சினை. அதனைத் தீர்ப்பதற்காக, ஒன்று பட்டுச் செயற்படுவதற்காக தேசிய அரசு நிறுவுவது என்றால் அது வரவேற்கப்பட வேண்டியதே.

உண்மையில், நாட்டில் அமைதியும், சமாதானமும், அபிவிருத்தியும் உண்டாக வேண்டுமானால், இனப்பிரச்சினையே முதலில் தீர்க்கப்பட வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து விடுவதால் மேற்கூறிய எதனையும் உருவாக்கிவிட முடியாது.

ஆனால் சிங்கள அரசியல்வாதிகளோ, எதற்கு முதன்மைத்துவம் கொடுக்க வேண்டும் என்பதனை உணரக்கூடியவர்களாக இல்லை. தேர்தலின் போது (தேர்தல் விஞ்ஞாபனங்களில்) எவ்வாறு இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விவகாரத்தை பின்னுக்குத் தள்ளி வைத்திருக்கிறார்களோ, அது போலவே தேர்தல் முடிந்த பின்னரும் அதனைப் புறந்தள்ளி நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதிலேயே கவனம்செலுத்தப்போகிறார்கள்.

இது போன்ற செயல்கள், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதிலோ தமிழர்களின் உரிமைகளை வழங்குவதிலோ சிங்கள அரசியல் தலைவர்களுக்கு அக்கறையில்லை என்பதனையே மேலும் உறுதிப்படுத்துகின்றன.

அதுமட்டுமன்றி—

தமிழர்கள் தங்கள் உரிமைகளைப்பெறுவதற்கு போராடவேண்டிய அவசியத்தை இது போன்ற நடவடிக்கைகள் மேலும் வலியுறுத்துகின்றன.

எந்த இடர்கள், கஷ்டங்கள் மத்தியிலும் தமிழர்கள் போராடித்தான் தமது உரிமைகளைப் பெறமுடியும். இல்லையேல் அடிமைகளாக வாழ மனங்கொண்டு, சிங்களவர்களிடம் பூரண சரணாகதி அடையவேண்டியதுதான். தமிழர் மத்தியில் போராட்டத்தில் நம்பிக்கை வைக்காத தமிழர்கள் இதனை உணர வேண்டும்.

# இந்தத் தடவை இலங்கையில் வினோத பொதுத் தேர்தல்

## "இந்தியன் எக்ஸ்பிரஸ்" கண்ணோட்டம்

கொழும்பு ஜூலை 29

1994 பொதுத் தேர்தல் இலங்கையில் வினோதமான - பயங்கர அற்புதங்களைக் — கொண்டதாக அமைந்துள்ளது.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் வெளியான இலங்கைக் கண்ணோட்டத்தில் அதன் கொழும்புச் செய்தியாளர் நீட்டா செயல்திபன் முன்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாட்டின் தற்போதைய அரசமைப்பையே கிழித்தெறியப் போவதாக முதலமைச்சர் ஒருவர் உச்சுறுத்தியுள்ளார்.

நான்கு அரசியல் விதவைகள் தேர்தல் களத்தில் உள்ளனர்:

அக்காவும் தம்பியும் எதிர் முகாம்களில் இருந்துகொண்டு ஆவல் ஆள் தாக்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னணி அரசியல்வாதி ஒருவர் 1989 — 90 களில் படுகொலையான 50 ஆயிரம் இளைஞர்களின் ஆவிகளைச் சந்திக்கப்போவதாக பயமுறுத்தியுள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜே.வி.பி. தலைவர் ஒருவர் லண்டனில் இருந்து பறந்து வந்திருக்கிறார்.

எதிரணியின் சார்பில் சந்திரிகா ஆக்ரோஷமான முறையில் தேர்தல் பிரசாரத்தை நடத்தி வருகின்றார்:

ஆளும் கட்சியின் பிரசாரத்துக்கு பிரதமர் தலைமை வகிக்கின்றார், ஆனால் அவர் தன்னை பிரபலப்படுத்திக் கொள்ளாது ஒதுங்கியே இருந்து வருகின்றார்.

18 லட்சம் முதல் 24 லட்சம் வரையான இளைஞர்களின் புதிய வாக்குகள் தான் இம்முறை ஆட்சி எந்தப்பக்கம் என்பதை நிர்ணயிக்கப் போகிறது.

இப்போதைய நிலையில் பெரும்பான்மையான இளைஞர் வாக்குகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு பிரதான கட்சிகளுக்கும் ஆதரவளிப்பதில்லை என்று தமிழர் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

பெரும்பான்மை சிங்களவர் மரம் என்றும் —

சிறுபான்மையினர் அம்மரத்தில் படரும் கொடிகள் என்றும் உவமை காட்டி ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்த கூற்று தமிழரின் உள்ளத்தை ஆழமாகத் தைத்துவிட்டது. ஆதலால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்த "மரத்"தையும் சுற்றி படரும் "கொடி"யாக இருப்பதில்லை என்று தமிழர்கள் தீர்மானித்துவிட்டனர்.

நாட்டில் அரசு எதிர்ப்பு அலை பலமாக வீசுகின்றது. 17 ஆண்டுகள் தொடர்ந்து ஐ.தே.க ஆட்சி செய்து வருவது அபூர்வமான நிகழ்ச்சியாகும்.

ஆகவே மக்கள் விடுக்கும் செய்தி தெளிவாக உள்ளது. இன்னும் ஐந்து வருடம் ஆட்சி புரிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுமதி வழங்க மக்கள் தயாராக இல்லை. எனவே பதவியில் இருந்து வெளியேறுக என்ற செய்திதான் தெளிவாக உரத்துக் கேட்கிறது.

— இப்படி அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## ஊழல் அரசியல்வாதிகளைப் பிடிக்க

# எதிரணி வெற்றி பெற்றதும் விமான நிலையத்தை மூடுக!

### பொ. ஐ. மு. சார்பில் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 29

எதிர்க்கட்சிக் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்ற செய்தி அறிவிக்கப்பட்டதும், கொழும்பு நகர விமான நிலையத்தை தற்காலிகமாக மூடிவிட வேண்டும் என எதிர்க்கட்சிக் கூட்டணி கேட்டுக் கொண்டிருப்பதாக "வெரித்தாஸ்" வானொலி அறிவித்தது.

ஆளும் கட்சியின் ஊழல் அரசியல்வாதிகள் நாட்டை விட்டுத் தப்பி ஓடாமல் இருக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தாம் கருதுவதாக எதிரணிக் கூட்டணி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் முன்னாள் அமைச்சரும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு நெருக்கமானவருமான சிறிசேன கூரே தமது குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறி இருப்பதாக எதிரணித் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

# 'மாற்றம்' சஞ்சிகையின் மதுரவிழா திங்களன்று

தமிழ்த்தாய் மன்றத்தின் "மாற்றம்" மக்கள் சஞ்சிகையின் 7ஆவது இதழ் வெளியீட்டை முன்விட்டு நடத்தப்படும் 'மதுர விழா' எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

விழாவின் முதன்மை விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர் திரு. ரீ. அருளானந்தம், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி ம. வாசுகி, கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொள்வர்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தொடக்கவுரை நிகழ்த்துவார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி ஆகியோர் மதிப்பீட்டுரை நிகழ்த்துவர். மாற்றம் சஞ்சிகையின் 7 ஆவது இதழ் வெளியீடும் அங்கு இடம்பெறும்.

வழக்காடுமன்றம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறவுள்ளன. (ஐ-30)

# நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ விசேட தினங்கள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டம்பர் 5 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இருபத்தி ஏழு தினங்கள் நடைபெறும்.

மஹோற்சவ கால விசேட தினங்கள் வருமாறு:

12-08-94 வெள்ளிக்கிழமை முதலாம் திருவிழா காலை 10 மணிக்கு கொடியேற்றம்.

21-08-94 ஞாயிறு பத்தாம் திருவிழா மாலை 5 மணிக்கு மஞ்சம்;

28-08-94 ஞாயிற்றுக்கிழமை பதினேழாம் திருவிழா கார்த்திகை உற்சவம் மாலை 5 மணி.

31-08-94 புதன்கிழமை இருபதாம் திருவிழா சந்தான கோபாலர் உற்சவம் காலை 7 மணி, கைலாசவாகனம் மாலை 5 மணி.

01-09-94 வியாழக்கிழமை இருபத்திோராம் திருவிழா காலை 7 மணிக்கு கஜவல்லி, மகாவல்லி உற்சவம் மாலை 5 மணிக்கு வேல் விமானம்.

02-09-94 வெள்ளிக்கிழமை இருபத்திரெண்டாம் திருவிழா தெண்டாயுதபாணி உற்சவம் காலை 7 மணி.

03-09-94 சனிக்கிழமை இருபத்துமூன்றாம் திருவிழா சப்பறம் மாலை 5 மணி.

04-09-94 ஞாயிற்றுக்கிழமை இருபத்தி நான்காம் திருவிழா தேர் காலை 7மணி.

05-09-94 திங்கட்கிழமை இருபத்தி ஐந்தாம் திருவிழா தீர்த்தம் காலை 7 மணி.

06-09-94 செவ்வாய்க்கிழமை இருபத்தி ஆறாம் திருவிழா பூங்காவனம் மாலை 5 மணி.

07-09-94 புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும். வைரவர் உற்சவத்துடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுறும். (க-111)

## புலிகளின் குரல் வானொலியில்

29-07-1994
வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி — நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது "இலக்கணம் இலக்கியம் கற்பித்தல்" அதனைப்படுத்து சிறுகதை "சிதையாத உள்ளங்கள்" சிறுகதையை அடுத்து கவிதை "படை பொன்று நகர்கிறது!"
★ 8-25 — கலைப்பொழுது
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் "மத்திய கிழக்கு எந்நேரமும் வெடிக்கும் வெடிமருந்துப் பொதி"
★ 8-50 — சிறப்பு நிகழ்ச்சி "இலங்கை இந்திய ஒப்பந்தம் நினைவாக" ஒப்பந்தம் தமிழருக்கு தீமூட்டிய பந்தம்"

30-07-1994
சனி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை.
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## கண்டன நடை பயணம்

தமிழக அரசின் நிர்வாகச் சீர்கேடுகளைக் கண்டிக்கும் நடைபயணத்தை திரு வை. கோபாலசாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு.க. புதன் ஆரம்பித்துள்ளது இப்பயணம் கன்னியாகுமரியில் இருந்து சென்னையை நோக்கி நடைபெறுகிறது. (க-4)

# தலைமைத்துவப் பண்புக்கு சுய அர்ப்பணம் அவசியம்

### கருத்தரங்கில் அரச அதிபர் உரை

"இளந் தலைமுறையினர் சமுதாயத்தோடு இணைந்து வாழப்பழக வேண்டும். இளைஞர்களிடையே தலைமை வகிக்கும் பண்பு வளர்வதற்கு சுய அர்ப்பணமும் சுய கட்டுப்பாடும் அவசியம் ஆகும்."

யாழ். மாவட்ட வியோ கழகங்களுக்கிடையிலான கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இவ்வாறு கூறினார்.

யாழ். மாவட்ட வியோத் தலைவர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த [illegible] கிழமை இக்கருத்தரங்கு நடைபெற்றது.

சயன் றேமன்ட் முத்தையா நினைவுப் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கான தங்கப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் யாழ். அரச அதிபர் வழங்கினார்.

மாவட்ட வியோக் கழகம் நடத்திய வியோ கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய [illegible] சான்றிதழ்களையும் [illegible] வழங்கினார். (க-111)

## வசாவிளான், வளலாய்ப் பகுதிகளில்

# பலாலி இராணுவத்தினர் வீடுகளை தகர்க்கின்றனர்

கடந்த சில தினங்களாக பலாலி இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வசாவிளான் வடமூலைப் பகுதி, வளலாய்ப் பகுதியில் பெரும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் இடைவிடாது கேட்டவண்ணம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் தமது பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் தமது பாதுகாப்பு நிலைகளுக்கு அருகில் உள்ள வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்ப்பதில் ஈடுபட்டிருப்பதாகவும் —

அதனால் தான் இக்குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்பதாகவும் கூறப்படுகிறது. (எ-11)

## அனைத்து அரசியல் தலைவர்களும்

# இன்னொரு நாட்டில் இரகசியப் பேச்சு!

### ஐ. தே. க.பிரமுகர் யோசனை

கொழும்பு, ஜூலை 29

இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் தலைவர்களும் இலங்கைக்கு வெளியே இன்னொரு நாட்டில் இரகசியப் பேச்சுகளை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வைக்க வேண்டும். இப்படி நாம் ஏன் செய்ய முடியாது?

ஐ.தே.க. உதவிச் செயலாளரும் மேல் மாகாண முன்னாள் முதலமைச்சரும் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. வேட்பாளருமான திரு சுசில் முனசிங்க முன்கண்டவாறு யோசனை தெரிவித்திருக்கிறார்.

"எமது தலைவர்களை வெளிநாட்டில் பேச்சுவார்த்தை நடத்த வைத்தால் தான், எல்லாவித நிர்ப்பந்தங்கள் மற்றும் செல்வாக்கு பிரயோகிப்பதை தவிர்த்துத் தீர்வு காணமுடியும்.

"இஸ்ரேல் பிரதமர் ரபீனையும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்தையும் ஒற்றுமையாக்க அவர்களின் சொந்த நாடுகளுக்கு வெளியே உள்ள குழு ஒன்றினால் தான் முடிந்தது"— என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (உ-எ)

## ஈழம் கொடுத்தாகி விட்டது;

# பிரபாகரனின் அரசாங்கம் வடபகுதியில் நடக்கிறது

### சந்திரிகா சொல்கிறார் இப்படி

கொழும்பு, ஜூலை 29

ஈழம் கொடுக்கவேண்டிய தேவை ஒருவருக்கும் ஏற்படவில்லை ஏற்கனவே விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் வடபகுதியில் சொந்தமாக தமது நிர்வாகத்தை நடத்தி வருகிறார். இதற்காக ஐ.தே.க. அரசுகளுக்கு நன்றி கூறவேண்டும்.

— முதலமைச்சர் சந்திரிகா கண்டி மாவட்டம், வத்துகாமத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசியபோது முன்கண்டவாறு தெரிவித்தார்.

1983 க்குப் பின்னர் தென் பகுதியில் இருந்து எவரும் வவுனியாவுக்கு அப்பால் செல்லமுடியாத நிலவரம் உள்ளது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

ஆனால் அரசாங்கம் இப்போது பாசாங்கு செய்து கொண்டு, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு வந்தால் நாட்டைப்பிரித்து விடும் என்று கூறுகிறது. ஏற்கனவே பிரபாகரன் ஈழம் பெற்றுவிட்டதால் நாட்டை பிரிப்பதற்கு அவசியமே ஏற்படவில்லை.

"யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து எமது அரசு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கும்"— என்று சந்திரிகா தெரிவித்தார். (உ-எ)

# லஞ்சக் குற்றச்சாட்டில் பொலீஸ் அதிகாரி கைது

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் உதவி பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை லஞ்ச ஆணையாளர் திணைக்களம் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

திணைக்களத்தின் லஞ்சப் பிரிவின் தலைவரான பொலீஸ் இன்ஸ்பெக்டர் தேவப்பிரிய விஜயரட்ணா அரச உதவி பொலீஸ் இன்ஸ்பெக்டரை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

சட்டவிரோதமாக மதுபானம் தயாரிக்கும் ஒருவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபாவை இவர் லஞ்சமாகக் கோரினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அந்த உதவி இன்ஸ்பெக்டர் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## யாழ். மாநகர எல்லைக்குள்

# 778 தாய்மார்களுக்கு இரத்தசோகை நோய்

### ஆய்வில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் மாநகர சபைப் பகுதியில் கடந்த அரை ஆண்டு காலப் பகுதியில் 778 தாய்மாருக்கும் இரத்தசோகை நோய் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரியினால் தீர்வகிக்கப்படும் வைத்திய சிகிச்சை நிலையங்களில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதியில் 891 தய்மார்களின் இரத்த வீதம் மதிப்பீடு செய்யப்பட்ட போது இந்த நிலை தெரிய வந்தது. (எ-4)

# எல்லைகளை மாற்றி ஈழத்துக்கு மாற்றுத் தீர்வு

### சந்திரிகாவின் திட்டம் இதுவாம்

ஈழத்துக்கு மாற்றாக வடக்கு-கிழக்கு மாகாண எல்லைகளை மீள் நிர்ணயித்து, இப்பிராந்தியத்தின் எல்லா இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான அதிகாரப்பகிர்வுத் திட்டம் ஒன்றை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமுல் நடத்தும்.

சந்திரிகா குமாரணதுங்க முன்கண்டவாறு கேகாலையில் நடந்த பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசியபோது தெரிவித்தார்.

தற்போதைய வடக்கு-கிழக்கு யுத்தத்தை ஐக்கிய தேசியக்கட்சி அரசுதான் ஆரம்பித்தது. இப்போது அரசின் உயர்நிலைப் பிரமுகர்கள் சிலரை செல்வந்தர்கள் ஆக்குவதற்காக அரசாங்கமே இந்த யுத்தத்தை நீடித்து வருகின்றது — என்றும் அவர் கூறினார். [உ-எ]

**சுத்தக் காற்றை சுவாசிக்க
சூழலெல்லாம் மரம் நடுவோம்**

# பேராசிரியருக்கு மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகத்தின் சேவைகளைப் பாராட்டி உரும்பிராய் ஞான வைரவர் கோயிலடிப் பொதுப்பணி மன்றங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள "மணிவிழா" நாளை சனி மாலை 5 மணிக்கு பொதுப்பணி மன்றங்களின் வளாகத்தில் நடைபெறவுள்ளது. மணிவிழாச் சபைத் தலைவர் திரு அ. க. த. கிருஷ்ணராசா விழாவுக்கு தலைமை வகிப்பார்.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன், வலிகிழக்கு பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் ஆகியோர் கௌரவவிருந்தினர்களாக கலந்து கொள்வர். 'இன்றைய அறிவியல் வளர்ச்சியில் மானுட வெற்றிக்கு நம் பாரம்பரிய கல்வி முறை,' என்ற தலைப்பில் கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமண்டபமும் அங்கு இடம் பெறவுள்ளது. (ஐ)

## இன்று

மட்டுவில் சந்திரபுரம் ஐங்கரன் மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட தையல், மனையியல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட யுவதிகளால் தயாரிக்கப்பட்ட தையல் பொருள்களின் பொருட்காட்சியும், கேக் கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் திறந்துவைக்கப்படும். (க-117)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு சுற்குளி கந்தசாமி கோயில் பாலர் பரிபாலன கல்வி நிலைய இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மைதானத்தில் ஆலய நிர்வாக சபைத் தலைவர் க. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் கி. நடராசா கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி வ. நடராசா வழங்குவார். (க-177-31)

★ ★ ★

ஜி. சீ. ஈ. (உயர்தரம்) பரீட்சை சம்பந்தமான அறிவுறுத்தல் கூட்டம் நன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். இக் கூட்டத்தில் சகல பரீட்சைப் பணிக் குழுவினரையும் பங்குபற்றும் படி யாழ் வலயம் — 1 கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

★ ★ ★

சந்நியாசி ஆச்சிரம கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று மாலை 3 மணியளவில் வைத்திய கலாநிதி சின்னத்துரை கதிரவேற்பிள்ளை "மனநலமும் தெய்வீகமும்" எனும் பொருளில் உரை நிகழ்த்துவார் திரு. க. மாணிக்கவாசகர் அறிமுகவுரையை ஆற்றுவார். (க)

★ ★ ★

வல்வை விக்னேஸ்வர சனசமூக நிலைய மாதிரிப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டியும் கலை விழாவும் இன்று முதல் நடைபெறும்.

கலை விழா இன்று இரவு 8 மணிக்கு வல்வை முத்துமாரி அம்மன் கோயில் வீதியிலும், ஞாயிற்றுக்கிழமை வல்வை சிவகுரு வித்தியாசாலை கலை அரங்கிலும் நடைபெறும். விளையாட்டுப் போட்டி நாளை மாலை 2-30 மணிக்கு வல்வை உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (க-155)

★ ★ ★

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கணித மூலவள நிலையத் திறப்பு விழா இன்று முற்பகல் நடைபெறும். (உ-28)

★ ★ ★

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி முதல் "அத்வைத தத்துவம்" என்னும் பொருள் பற்றிய தொடர் விரிவுரை டாக்டர் வி. சிவப்புவினால் நிகழ்த்தப்படும். (உ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் தமிழர் அனைவரும் பொலீஸில் பதிவு செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

மட்டக்களப்பு நகர்பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் மீது பொலிஸார் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

நிரந்தரமாக வசிப்பவர்கள், தற்காலிகமாக வசிப்பவர்கள் அனைவரும் தம்மிடம் பதிவு செய்ய வேண்டும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக இவ்வறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இது தமிழர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதாக அமைவதாக கருதப்படுகிறது. (இ-3)

## "நரோமா" பயணிகளுக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஜூலை மாதம் 30 ஆம் திகதி நரோமா கப்பலில் பயணம் செய்வதற்கு யாழ். செயலகத்தில் பணம் செலுத்திய பயணிகளை மட்டும் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் முதலாம் வாரத்திற்கும், முதலாம் திகதியும் பிரயாணம் செய்வதற்கு பணம் செலுத்திய பயணிகளை முதலாம் திகதி (திங்கட்கிழமை) பருத்தித்துறை இறங்குதுறைக்கு நண்பகல் 12 மணிக்கு முன்னதாக சமுகமளிக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பயணிகள் நேரத்துடன் சமுகமளித்து தமது பயணத்தை உறுதிப்படுத்துமாறும் யாழ் செயலகம் கோரியுள்ளது (உ-6)

## 986 ஆம் இலக்க பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 29

இராச வீதி ஊடான யாழ் அச்சுவேலி 986 இலக்க பஸ் சேவை திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற உள்ளதாக யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

காலை 7.00 மணிக்கு அச்சுவேலியில் இருந்து ஆரம்பித்து நாளுக்கு சேவைகள் மாலை 4.00 மணி வரை நடைபெறும். (இ)

## நாளை

தென்புலோலிமாணவத்தை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை நடைபெறவுள்ளது. (உ-173)

## ஆலயங்களில்

பண்டத்தரிப்பு பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று (வெள்ளி) நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து 12நாட்கள் நடைபெறும். (ஜ-15)

★ ★ ★

மீசாலை காட்டுவளவு நெல்லியடி முருகன் ஆலய சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் நடைபெறும். (க-117)

★ ★ ★

அச்செழு- கொக்கிருந்தபதி ஸ்ரீ சிவகாமி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா ஆகஸ்ட் 8 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா ஆகஸ்ட் 9 ஆம் திகதியும் நடைபெறும். (க)

## சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்

## SAIVA SIDDHANTA STUDY CIRCLE

## 5 வது ஆண்டு நிறைவுவிழா கருத்தரங்கு

தலைமை / கருத்துரை:- வாகீச கலாநிதி க. நாகேஸ்வரன் M. A.

கருத்துரை:- திரு. வே: யுபாலசிங்கம் M. A.

பொருள்:- திருக்களிற்றுப் படியார்

காலம்:- 30 - 07 - 1994 சனிக்கிழமை காலை 9.30 — 1.00 மணிவரை

இடம்:- திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடம் 238, பிரதான வீதி, யாழ்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

F. J. சதானந்தன் பொறுப்பாளர்

V. J. கொன்ஸ்ரன்ரைன் பொதுச் செயலாளர்

(சி/8800)

## மரண அறிவித்தல்கள்

### சபாபதி மதனராஜ்

சங்கத்தானை, சாவகச்சேரியை சேர்ந்த சபாபதி மதனராஜ் (பபா) (முன்னாள் சாவகச்சேரி மின்சார சபை உத்தியோகத்தர்) 25-07-1994 சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

இவர் சபாபதி - நாகம்மா ஆகியோரின் அருமை மகனும், வசந்தாவின் அன்புக் கணவரும், சன்ஜா, சரோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தினியின் அன்புச் சகோதரனும், ஆனந்தனின் அன்பு மைத்துனரும், தர்சன், நிஸ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சபாபதி (தகப்பனார்).

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(32133)

### திருமதி திரவியம் பரமானந்தம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை மன்னார் திருக்குடும்ப கன்னியர்மடம்)

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திரவியம் பரமானந்தம் 26 - 07 - 1994 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு - சின்னம்மா அவர்களின் அன்பு மகளும், பரமானந்தம் (ஓய்வுபெற்ற அரச அதிபர்-மன்னார்) அவர்களின் அன்பு மனைவியும், மோகனதாஸ் (கனடா), ரவீந்திரதாஸ் (கனடா), தேவதாஸ் (கனடா), புஷ்பவதா (ஆசிரியை), சியாமளா (கனடா), விஜிதா, ஜீவதாஸ் ஆகியோரின் அன்பு தாயாரும், மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), அமிர்தமலர் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை கனடாவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சி. மகேஸ்வரி (சகோதரி)

110, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[32130]

### வைத்திலிங்கம் சேனாதிராஜா

(நீர்வேலி வடக்கு)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சேனாதிராஜா காலமானார்

இவர் ஞானம்மாவின் அன்புக் கணவரும், சத்திய ஞானதேவ், சத்தியசீலன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), தவசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ச. அருந்தவ திலகம், (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கோப்பாய் கல்விக் கோட்டம்), சுரேந்தினி (ஆசிரியை யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் உஷாநந்தன், சஜீவா, யுகசாந் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 29. 07. 94 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
சே. சத்தியசீலன் (மகன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி

(32137)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். றோட்டறக்ட் கழகம் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் — இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் அணி மோதவுள்ளது. (ஐ)

★ ★ ★

வலி மேற்கு உதைபந்தாட்டச் சங்கம் வலி மேற்கு பகுதி கழகங்களுக்கிடையே — கல்லாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் — நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — கண்ணகி வி. க. அணி எதிர் லக்கி ஸ்ரார் அணி.

★ பிற்பகல் 4 மணி — மானிப்பாய் சில்வர் ஸ்ரார் அணி எதிர் கலாஜோதி வி. க. அணி.

★ பிற்பகல் 5 மணி — யங் ஹென்றிஸ் அணி எதிர் சென். தோமஸ் அணி. [ஐ-20]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் வை. எம். சி. ஏயின் வருடாந்த உள் அரங்கு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகும்.

முதற்கட்டமாக பூப்பந்து, செஸ் போட்டிகள் நடைபெறும்.

13, 15, 17, 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள், பெண்களுக்கான போட்டிகளும்—

வயது கட்டுப்பாடற்ற ஆண்கள், பெண்களுக்கான போட்டிகளும் — நடைபெறும். (இ-3)

## மாணவர் வழிபாட்டு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 29

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 1994 ஆகஸ்ட் ஜி சீ ஈ. (உயர்தர) தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களின் மாதா. பிதா, குரு. தெய்வ வழிபாட்டு நிகழ்ச்சி இடம்பெறும். (க)

## கூட்டுறவாளர் தின விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

நாளை மறுதினம் ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருந்த சர்வதேச கூட்டுறவாளர் தின விழா பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வசித்துவரும் அரச உத்தியோகத்தர்களுக்கும் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலி ... யார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க)

## சந்திரிகாவை கொல்லச் சதி! சந்தேகநபர் பிடிபட்டார்!!

கொழும்பு, ஜூலை 29

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித்தலைவர் சந்திரிகா குமாரணதுங்காவைக் கொலை செய்யும் சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரை ரகசிய பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

சமனாலை என்று அழைக்கப்படும் அந்த நபர் இரகசியப் பொலிஸ் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்.

சந்தேக நபர் தம்மைக் கைது செய்ய முயற்சித்த பொலிஸாரை சுட்டுவிட்டு தப்பியோட முயற்சித்த போது கைது செய்யப்பட்டார் என்று ரகசிய பொலிஸ் பொறுப்பதிகாரி சாமன் சிகேரா தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு சிறையில் இருந்து தப்பிச் சென்றவர் என்று அடையாளங்காணப்பட்ட இந்த நபர் காலி அக்மீமன மற்றும் பத்தேகம பகுதிகளில் இடம்பெற்ற பல கொலைகள், கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த நபர் கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாகவும் தேடப்பட்டு வந்தார் என்று சிரேஷ்ட சி ஐ.டி. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாக்களிப்புத் தினத்துக்கு முன்பதாகத் தம்மைக் கொலை செய்யும் சதித்திட்டம் ஒன்று இருப்பதாக சந்திரிகா பொலிஸ்மா அதிபருக்கு கடந்த 9 ஆம் திகதி எழுத்து மூலம் முறையிட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

## மோட்டார் ஊர்தி உரிமை மாற்றம்

எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து மோட்டார் ஊர்திப்பதிவுச் செயலகத்தினால் ஊர்திகள் உரிமை மாற்றம் செய்து கொடுக்கப்படவிருக்கின்றது.

எனவே தமது ஊர்திகளை வேறு ஒருவருக்கு உரிமை மாற்றம் செய்ய விரும்பும் ஊர்தி உரிமையாளர்கள், கொழும்பு மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட பதிவுப் புத்தகத்துடனும் பதிவுப் பத்திரச் சீட்டுக்களுடனும், வரி அட்டை, குடும்ப அட்டை என்பவற்றுடனும் ஊர்தியை ஏற்கவிருக்கும் புதிய உரிமையாளருடன் கொழும்பிலுள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்குச் சென்று ஊர்தி உரிமை மாற்றத்தை மேற்கொள்ளலாம் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர். (இ)

## யாழ், மத்திய கல்லூரியின் 175 ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் மத்திய கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண. ஜேம்ஸ் லிஞ்ச் அரங்கில் பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன் தலைமையில் நடைபெறும்.

விழா காலை 7. 30 மணிக்கு யாழ். முனியப்பர் கோயிலில் விசேட பூசையுடனும் யாழ். மெதடிஸ்த தேவாலயத்தில் விசேட ஆராதனையுடனும் ஆரம்பமாகும்.

விழாவில் தேசியக் கொடியைக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரனும், கல்லூரிக் கொடியை அதிபர். திரு நா. க. சண்முகநாதபிள்ளையும், பழைய மாணவர் சங்கக் கொடியை டாக்டர் எஸ் பி. ஆர். சீர்மாறனும் ஏற்றுவார்கள்.

அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கல்லூரிப் பெயர்ப்பலகையையும், தர்க்கா தேவஸ்தான தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சரஸ்வதி சிலையையும் திரை நீக்கம் செய்து வைப்பார்கள். 175 ஆவது ஆண்டு நிறைவு மண்டப அடிக்கல்லை கலாநிதி என். எதிர்வீரசிங்கம் நாட்டுவார். பழைய மாணவர் சங்க அலுவலகத்தை பேராசிரியர் வி. நகேந்திரராசா திறந்து வைப்பார்.

விழாவில் பெரியோர்கள் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்; 175 ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

175 ஆவது ஆண்டு நிறைவாக மரங்கள் நடப்படும்! பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்களுக்கும் இடையில் மென்பந்து கிரிக்கெட் போட்டியும் இடம்பெறும். (க)

## பரிசளிப்பு விழா

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அதிபர் திரு. ஆ. ஈஸ்வரநாதன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை வித்தியாலய திறந்த வெளி அரங்கில் நடைபெறும். (இ-11)

## தமிழரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் அனைவரும் அவ்வர்த்தகரின் வீட்டில் தங்கியிருந்து தொழில் செய்து வந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பினால் வீட்டுக் கூரை, வடிகால்வாய் ஆகியன சேதமடைந்தன. குண்டைச் செயலிழக்கச் செய்யும் பொலிஸார் உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

கைதான இளைஞர்களில் ஆறு பேர் சென்னையில் இருந்து வந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்தேக நபர்கள் இந்தியாவில் இருந்து சாறிகள் மற்றும் பொருள்களைக் கொண்டுவந்து பொதிகளில் அடைத்து விற்பனை செய்து வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தெஹிவளையில் உள்ள மறைவிடங்கள் இரண்டில் 350 கிலோவுக்கு அதிகமான வெடிப்பொருள்களைக் கைப்பற்றிய சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வரும் நபர்கள் இவர்களில் உள்ளனரா என்பதை அறிந்து கொள்ளும் விசாரணையை தெஹிவளைப் ... விக்கப்பட்டது. (ஐ-எ)

## வடக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதி ஆஸ்பத்திரிகளின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றும் விதத்தில் தொண்டர் டாக்டர்களைப் பணிக்கு அமர்த்த முடிவு செய்தது.

இது சம்பந்தமாக கொழும்பில் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் ஐ. நா. தொண்டர் பிரிவு திட்ட அதிகாரி திரு. ரப்பான் குமார் பார்மன் தொடர்பு கொண்டு அவர்களின் சம்மதத்தைப் பெற்றார்.

வடபகுதி ஆஸ்பத்திரிகளின் தேவைகளை அறிவதற்காக அவர் நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு இரண்டு தொண்டர் டாக்டர்கள் அனுப்பப்படுவர். இன்னும் எத்தனை டாக்டர்கள், எந்தெந்தத் துறையைச் சேர்ந்த டாக்டர்களை தேவை என்பதனை மதிப்பீடு செய்த பின்னர் மேலும் டாக்டர்கள் இங்கு அனுப்பப்படுவர் என்று திரு. பார்மன் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு) ஆஸ்பத்திரிகளுக்கு ஐந்து தொண்டர் டாக்டர்கள் உடனடியாக அனுப்பப்படுவர் என்றும் திரு. பார்மன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் எந்தெந்த ஆஸ்பத்திரிக்கு, என்னென்ன துறை சார்ந்த டாக்டர்கள் தேவை என்பது குறித்து ஆராயவே இங்கு வந்துள்ளோம்—

இது விடயமாக வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோருடன் நேற்றுப் பேசினேன்—

மருத்துவத்துறை சார்ந்தவர்களுடன் இன்று பேசவிருக்கிறேன்—என்று திரு. பார்மன் தெரிவித்தார்.

திரு. பார்மனுடன் இங்கு வந்துள்ள ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரி மல்கம் ரிட் அவுட்டும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.

## இலவச சித்த வைத்திய சேவை

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் நடமாடும் இலவச சித்தவைத்திய சேவை இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையத்தில் நடைபெறும். (இ-4)

## சாவகச்சேரி வாசி சுவிஸில் மரணம்

தென்மராட்சி, ஜூலை 29

சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் மரணமானார்.

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த சபாபதி மதனராஜ் (வயது 34) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே மரணமானவர் ஆவார். (இ-117)

## யாழ். வந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரியும் அதிகாரியான திரு. மக்ஸ் கண்டோரன் —

ஐ. நா. தொண்டர் அமைப்பின் கொழும்பு அலுவலக அதிகாரி திரு: ரப்பன்குமார் வார்மன்—

ஐ. நா. அபிவிருத்தி திட்ட கொழும்பு அதிகாரி திரு. மல்கம் றிட் அவுட் — ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் பரஞ்சோதி

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது குருநகர் இராசேந்திர அலெக்ஸ்மாடி 42/9 ஆம் இலக்கத்தில் வசித்தவருமான ஆறுமுகம் பரஞ்சோதி 27 - 07 - 1994 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லாச்சி தம்பதிகளின் மூத்த மகனும், சுந்தையா - காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், தர்மினி (பபா), சற்குசரசி, சேந்தினி, கேதீஸ்வரன், விக்கினேஸ்வரன் (மாணவன் O. L. R.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசேஸ்வரனின் (இராசேஸ் போட்டோ, சிறாம்பியடி) அன்பு மாமனாரும், ரூபவி, சிவாசினி ஆகியோரின் அன்புப் பேரனும், பொன்னம்மா, காலஞ்சென்ற தமசிவாயம், புஸ்பம், உலோகநாதன் (சந்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசேஸ்வரி, கமலாதேவி, காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, தம்பிராசா மற்றும் ஸ்ரீசண்முகராசா (கிளிநொச்சி), பொன்னம்பலம் (சுவிஸ்), சோமசுந்தரம் (அருள், திருநகர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-07-94) அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ: சந்திரன் (சகோதரன்)

42/9, அலெக்ஸ் மாடி,
இராசேந்திரா வீதி,
குருநகர்.

(32138)

### திருமதி பூலோகராசா செல்லம்மா

தொல்புரம் மத்தியைச் சேர்ந்த திருமதி பூலோகராசா - செல்லம்மா நேற்று இறைவனடி எய்தியுள்ளார்.

இவர் இளைப்பாறிய ஆசிரியர் திரு சி. பூலோகராசாவின் அன்பு மனைவியும், பா. பாக்கியநாதர் (யாழ். செயலக மேலதிக பதிவாளர் அலுவலகம்), திருமதி அரியசோதி, திருமதி தனலட்சுமி அம்மா (சுவிஸ்), திருமதி நேசராணி (சுவிஸ்), திருமதி செல்வராணி (சுவிஸ்), செல்வி - தேவராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், ச. முருகையா (பிரதேசச் செயலகம், சங்கானை), க. நவரத்தினம் (சுவிஸ்), த. சந்திரகுமார் (சுவிஸ்), இந்திரகுமார் (சுவிஸ்), திருமதி பா. சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மாமியாரும், முகுந்தன் (சுவிஸ்), செல்வி பானுமதி (ஆசிரியை மானிப்பாய் மெமோறியல் கல்லூரி), சிவேந்திரன், புவேந்திரன், கேசவன், பாஸ்கரன் (உயர் தேசிய கணக்கியல் டிப்புளோமா H N D A I ஆம் வருடம் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), பகீரதன், பாமினி, சுரேஸ், யேந்தினி, சந்தஷ்சா, சந்தஷ்ரெ, பபிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும், சி. சி. வரதராசா (யாழ். உதவி மது வரித்திணைக்களம் ஆணையாளர்பணிமனை, பத்திரிகைச் செய்தியாளர்- கொழும்புத்துறை) அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பகல் 12.00 மணிக்கு மூளாய் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பூ: பாக்கியநாதர் (மகன்)

"நேசராணி வாசம்"
தொல்புரம் மத்தி;

(சி/8801)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற் லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29 - 07 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org